## தமிழ்நாடு சட்டப் பேரவை

### சனிக்கிழமை, 1973 மார்ச் 3

சென்னே செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலே 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினக்கள்-விடைகள்

#### வெள்ளிக்குறியிட்ட வினக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 221, 222 ஆகிய வினக்கள் தள்ளிவைக்கப்படுகின்றன.

#### கல்வி அதிகாரிகளாக உள்ள பெண்கள்

*223 வின—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகளாகவும், மாவட்ட கல்வி அதிகாரிகளாகவும் பெண்கள் எத்தனே பேர் தற்போது பணியாற்றுகிருர்கள்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** முதன்மைக்கல்வி அலுவலர்கள் 3, மாவட்டக் கல்வி அலுவலர்கள் 16.

**டாக்டர் ச. மு. பழனியப்பன்:** இப்படி பெண்கள் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களாகவும் மாவட்டக் கல்வி அதிகாரிகளாகவும் பணியாற்றுகிற இடத்தில் ஆண்களேவிட நிர்வாகம் சிறப்பாக இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலேவர் அவர்களே, இதிலே வேறுபாடு காட்டப்படவில்லே. இருபாலாருக்கும் ஒத்த நோக்கத்தின் அடிப்படையில் பதவிகள் வழங்கப்படுகின்றன.

**திரு. ஆ. பரந்தாமன்:** இந்தப் பெண்களில் பெரும்பாலானவர்கள் கன்யாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்கிருர்களே அது உண்மையா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றி விவரம் இல்லே.

திரு. என். கிட்டப்பா : இந்தக் கல்வி அதிகாரிகளில் ஆதித் திராவிட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் எத்தனை பேர் என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தனிக் கேள்வி வேண்டும்.

*Divisions of Madras Corporation*

* 224 Q.—THIRU N. DENNIS:
THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Madras Corporation have requested the Government to increase the number of divisions in the City;

(*b*) if so, the details thereof; and

(*c*) the action taken thereon?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஒவ்வொரு கோட்டத்திலும் பத்தாயிரத்திற்குட்பட்ட வாக்காளர்கள் இருக்கும்படியாக அதன் எல்லைகளை நிர்ணயித்து தற்போதுள்ள 120 கோட்டங்களுக்குப் பதிலாக 150 கோட்டங்கள் அமைப்பதற்கு சென்னை மாநகராட்சி சட்டத்தில் 45-வது பிரிவை திருத்தும்படி சென்னை மாநகராட்சி மன்றம் அரசைக் கேட்டிருந்தது.

(உ) சென்னை மாநகரத்தில் கோட்டங்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்குத் தக்கவாறு சென்னை மாநகராட்சிச் சட்டம் திருத்தப்பெற்றுள்ளது.

THIRU N. DENNIS: Sir, may I know whether the work relating to the delimitation of divisions has been started?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 150 கோட்டங்களாகப் பிரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதுபற்றிய அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி மாநகராட்சி ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. என். கிட்டப்பா : சென்னை மாநகராட்சிக் கோட்டங்களை அதிகப்படுத்துகின்ற நேரத்தில் சென்னை மாநகராட்சிப் பகுதியில் அடங்கிய சட்டப் பேரவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நமது அரசு மத்திய அரசுக்கு எடுத்து வலியுறுத்தியுள்ளதா ?